10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 253 வியாழக்கிழமை பெப்ரவரி 01 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

யாழ்ப்பாணம், மன்னாரிலிருந்து

## தமிழ்நாட்டுக்கு கப்பல் சேவை

மன்னார், பெப். 01

யாழ்ப்பாணம், தலைமன்னாரில் இருந்து தமிழ்நாட்டுக்கு நேரடி கப்பல் சேவை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர்களை ஆதரித்து மன்னார் பஸ் நிலையத்தில் நேற்று நடந்த பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ச)

(மேலதிக செய்தி பக்கம் 4 இல்)

துரோகியான கருணாவுக்கு

## இந்தியாவே புகலிடமானது

கொழும்பு, பெப். 01

தலைவர் பிரபாகரனுக்கு துரோகம் செய்தபின்னர் கருணாவுக்கு இந்தியாவே தஞ்சம் வழங்கியிருந்தது என்ற தகவல் இப்போது உறுதியாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை அழிக்க இந்தியா கங்கணம் கட்டிக் கொண்டு செயற்பட்டது. எனினும் இந்தியா அதை மறுத்த நிலையில் தமிழர் தேசத்தில் பல விடயங்களை அரங்கேற்றி வந்தது.

இந்நிலையில் உள்ளூராட்சியில் போட்டியிடும் தனது கட்சியான 06▶

## கூட்டமைப்பை சாடும் தகுதி சுரேஸ், சங்கரிக்கு இல்லை

யாழ்ப்பாணம், பெப். 01

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி 2004 இல் பறிக்கப்பட்ட பின்னர்கூட வீட்டை மீள வழங்காது வைத்திருக்கும் ஆனந்தசங்கரியும், பிரதேச சபை தொடக்கம் மாகாண சபை வரை ஊழலுக்கு பெயர்போன சுரேஸ் பிறேமச்சந்திரனும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை விரல் நீட்டி குற்றஞ்சாட்டத் தகுதியானவர்கள் அல்ல. இவர்கள் அப்பட்டமான பொய்யை சொல்கிறார்கள். 06▶



தைப்பூச திருநாளான நேற்று, உலகப் பெருமஞ்சத்தில் இணுவைக் கந்தன் ஆரோகணித்து வருவதைக் காணலாம்.

## பேச்சுக்கான கடைசி தலைவர் சம்பந்தனே

யாழ்ப்பாணம், பெப். 01

தமிழ் மக்களின் அடிப்படை, அரசியல் பிரச்சினைகள் குறித்து இலங்கை அரசுடன் பேசும் கடைசி தமிழ்த் தலைவராக இரா.சம்பந்தனே இருப்பார். அவரின் காலத்தில் இப்பிரச்சினைகள் தீர்க்கப்படாது போனால் அடுத்துவரும் சந்ததிகளின் தமிழ்த் தலைமை சர்வதேசத்துடனே பேச வேண்டியிருக்கும்.

- இவ்வாறு ரெலோ அமைப் 06▶

# வடக்கு, கிழக்கில் ஆயிரம் விகாரைகள்

## ஐ.தே.க. தேர்தல் விஞ்ஞாபனம்




வவுனியா, பெப்ரவரி 01

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயிரம் விகாரைகளை அமைக்க நிதி ஒதுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் 'கிராமத்தை சீரமைக்கும் அரசாங்கம்" என்ற பெயரில் நேற்று வவுனியாவில் வெளியிடப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக்கூட்டம் வவுனியா கலைமகள் மைதானத்தில் இடம்பெற்றது. 06▶

## இளம் குடும்பப் பெண் கொலை! பட்டப்பகலில் மாதகலில் கொடூரம்

யாழ்ப்பாணம், பெப். 01

பட்டப்பகலில் இளம் குடும்பப் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

மாதகல் சேந்தான்குளம் பகுதியை சேர்ந்த அன்ரன் உதயராஜ் டிலக்ஸி (வயது -22) என்ற பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

நேற்றுக் காலை பெண்ணின் கணவரும் பெற்றோரும் கோவிலுக்கு சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பியபோது டிலக்ஸி இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். 06▶

கைதாகலாம் என்ற அச்சத்தாலேயே

## கோத்தா நாட்டை விட்டு ஓடினார்

கொழும்பு, பெப். 01



மிக் விமான கொள்வனவு ஊழலில் கைதாகலாம் என்ற அச்சத்தாலேயே கோத்தபாய ராஜபக்ச நாட்டிலிருந்து ஓடிவிட்டார் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

மகரப் பிரதேசத்தில் நடந்த தேர்தல் பிரசாரத்திலேயே அவர் இதனைக் கூறினார்.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க மகிந்தவின் ஆட்சியில் கொல்லப்பட்டார். 06▶

உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்



உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# தொழிற்சங்க நடவடிக்கை வேண்டாம்! தேர்தல் கண்காணிப்பு குழு கோரிக்கை

கொழும்பு, பெப். 01

தேர்தல் காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் தொழிற்சங்கங்களை கேட்டுள்ளன.

மூன்று வருடங்களின் பின்னர் இடம்பெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தடை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவது தொழிற்சங்கங்களின் பொறுப்பு அல்ல என்று தேர்தல் வன்முறைகள் தொடர்பான கண்காணிப்பு நிலையத்தின் தேசிய இணைப்பாளர் மஞ்சு கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் இடம்பெறவிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வது நியாயமற்றதென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.



# சுதந்திர தினத்தை முன்னிட்டு புதிய நாணயத்தாள் வெளியீடு

கொழும்பு, பெப். 01

70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு புதிய ஆயிரம் ரூபா தாளை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது. இதில் நான்கு மத ஸ்தலங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. அத்துடன் நான்கு இனத்தவர்களையும் குறிக்கும் விதத்திலும் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

50 இலட்சம் எண்ணிக்கை கொண்ட நாணயத்தாள்களே வெளியிடப்பட்டுள்ளன. நாணயத்தாளை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிடம் உத்தியோகபூர்வமாக நேற்று வழங்கினார்.

ஒரு நாணயத்தாளை 1300 ரூபா செலுத்தி பொருளாதார வரலாறு அரும்பொருட்காட்சி சாலையிலும் மத்திய வங்கியின் அநுராதபுரம், மாத்தறை, மாத்தளை, திருகோணமலை, கிளிநொச்சி பிரதேச அலுவலகங்களிலும் மக்கள் பெற முடியும். (ச)

# வாசனைத் திரவியங்களால் ரூ. 3,960 கோடி வருமானம்



கொழும்பு, பெப். 01

வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி மூலம் 2016 ஆண்டு மட்டும் மூவாயிரத்து 960 கோடி ரூபா வருமானமாக கிடைத்துள்ளது.

இதில், மிளகு ஏற்றுமதி மூலம் ஆயிரத்து 80 கோடி ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது என்று கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் வாசனைத் திரவியங்களுக்கு கிராக்கியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கென வாசனைத் திரவியங்களின் கிராக்கியை மேம்படுத்துவதற்கான சகல ஒத்துழைப்புக்களும் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச)

# தேர்தல் கண்காணிப்புக்கு 7,000 தொண்டர்கள் தயார்

கொழும்பு, பெப். 01

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக 7,000 தொண்டர்கள் தயார் நிலையில் இருக்கின்றனர் என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும், இதில் 1000 பேர் தபால் மூல வாக்களிப்பு பணிகளின் கண்காணிப்பு பணிகளிலும், 4000 இற்கும் மேற்பட்டோர் வாக்களிப்பு நடைபெறும் இடங்களுக்கு அனுப்பப்படவுள்ளனர். அத்துடன் 1500 பேர் 350 வாகனங்களில் பயணித்து நடமாடும் கண்காணிப்பு பணியிலும் ஈடுபடவுள்ளனர் என பவ்ரல் அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் சுஜீவ ஜயலத் குறிப்பிட்டார்.

கொழும்பு, மருதானையில் அமைந்துள்ள சமூக நல கேட்போர் கூடத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ச)

# நீர் வழங்கல் திட்டம்

யாழ்ப்பாணம், பெப்.1

குடிநீர் வசதி இல்லாத உடுப்பிட்டி இமையாணன் பிரதேச மக்களுக்கு நீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன் பெறும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை முகாமையாளர் ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தத் திட்டத்துக்காகப் பொதுமக்களிடம் இருந்து காணி ஒன்று கிடைத்துள்ளது என்றும், திட்டத்தின் முழு விவரங்களும் வரும் மார்ச் மாதம் வெளியாகும் என்றும் அவர் மேலும் கூறினார். (ச)

# ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்ட மீளாய்வு அறிக்கைக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 01

யாழ். மாவட்டத்தின் ஐந்து ஆண்டுக்கான (2018 - 2022) அபிவிருத்தித் திட்டம் தொடர்பான மீளாய்வு அறிக்கைக்கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்தி முடிவுறுத்துவதற்குத் தேவையான ஆலோசனையையும், ஒத்துழைப்பையையும் வழங்குமாறு திணைக்களத் தலைவர்களை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கேட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இத்திட்டம் இடம்பெறுகின்றது. இதன் உப துறைகளோடு தொடர்புடைய மாகாண, மத்திய நிறுவன அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கிராமமட்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் ஐ.நா. நல்லாட்சிக்கான ஆலோசகர் க.ரஞ்சனின் ஆலோசனை வழிகாட்டலின் அடிப்படையில் அனைத்துத் துறைமுகங்களுக்குமான திட்டங்களின் வரைபுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. (ச)

# இராணுவத்தினருக்கென தனியாக அதிசொகுசு பேருந்து சேவை





கிளிநொச்சி, பெப். 01

இராணுவத்துக்கெனத் தனியாக கிளிநொச்சியில் இருந்து கொழும்பு வரை அதி சொகுசு பேருந்து சேவை நடத்தப்படுகின்றது.

கிளிநொச்சி இராணுவத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அஜித் காரியகரவண தலைமையில் கடந்த சனிக்கிழமை இந்த அதிசொகுசு பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.

தனியார் பேருந்து நிறுவனம் ஒன்றுடன் இணைந்தே இந்தப் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயண நேரத்தில் 2 திரைப்படங்கள் ஒளிபரப்பப்படவுள்ளன. (ச)

# விளக்கவுரை

யாழ்ப்பாணம், பெப். 01

யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத் சைதன்யா சுவாமியாரின் வாராந்த கந்தபுராண விளக்கவுரை நாளை வெள்ளிக்கிழமை நல்லூரில் இடம்பெறவுள்ளது.

ஞானவேல் ஆச்சிரமத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் இடம்பெறும் இந்நிகழ்வில் நாளை "ஆறுமாகமான பொருள்" என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார். (ச)

# சுவாசமின்றி மரணித்தது சிசு

யாழ்ப்பாணம், பெப். 01

பிறந்த இரு மணி நேரத்திலேயே சுவாசக் கோளாறால் உயிரிழந்தது சிசு.

தெல்லிப்பழையைச்சேர்ந்த ஜெயக்குமார் - கல்பனா தம்பதியரின் சிசுவே இவ்வாறு உயிரிழந்தது.

குழந்தைப் பேற்றுக்காக கல்பனா நேற்று தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு குழந்தை பிறந்தது.

குழந்தைக்கு சுவாசத்தில் கோளாறு இருப்பது தெரியவரவே உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் குழந்தை உயிரிழந்து விட்டது. (ச)

# ஊழல் குற்றச்சாட்டு நிரூபணமானால் மகிந்தவின் பிரஜாவுரிமை பறிக்கப்படும்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, பெப். 01

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களின் ஊழல் நிரூபிக்கப்பட்டால் அவர்களின் பிரஜாவுரிமையைப் பறிக்க வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். இங்கு மேலும் உரையாற்றிய அவர் கூறியதாவது,



சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்துக்கு நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டுக்கு இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பாக விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஒருவர் 7 வருட காலத்துக்கு குற்றவாளியாக இனங்காணப்பட்டால், அந்த 7 வருட காலத்துக்கும் பிரஜா உரிமை இல்லாமல் போகும் என்றும் ஆகவே அவர்களால் 07 ஆண்டுகளுக்கு மக்கள் பிரதிநிதியாகும் வாய்ப்பும் இல்லாமல் போகும் என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறினார். (ச)

எதிரொலி Ethiroli
வியாழன். 01 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

# சோதனைக் கூட்டமைப்பு

கடந்த சில வருடங்களுக்கு முன்னர வரை படையினர் மீது, இலங்கை அரசு மீதும் தமிழ் மக்களுக்கு அடிக்கடி கோபத்தீயை உண்டுபண்ணிய விடயம், பாதுகாப்புக் கெடுபிடிகள் தான். போர் நிகழ்ந்த போது, சந்திக்கு சந்தி காவலரண்களுக்கு முன்னால் வாகனங்களை விட்டிறங்கி, குறிப்பிட்ட தூரமளவுக்கு நடந்து செல்ல வேண்டும். அதன் போது அடையாள அட்டையை வாங்கி, ஆயிரத்தெட்டுக் கேள்விகளைக் கேட்டு, உடமைகளை ஒவ்வொன்றாக வெளியில் கொட்டி, உடலை ஒரு அங்குலம் கூட மிச்சமில்லாமல் தடவி, தங்களுடைய சோதனைகளால், மக்களின் ஆத்திரத்தை படைத்தரப்பு அதிகப்படுத்திக் கொண்டிருந்தது.

அதேபோன்று,ஈ.பி.டி.பியின் செயலகம் அமைந்துள்ள ஸ்ரீதர் தியேட்டருக்குள் அப்போது அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்கச் செல்லுபோதும், இதைப் போன்ற உடற்பரிசோதனைகள் பலமாக இருந்தன. "இப்பிடிச் சோதிக்கிறதை விட உடுப்பைக் கழட்டிப் பாத்திருக்கலாம்" என்று மக்கள் அங்கலாய்க்கும், அளவுக்கு, உடலின் ஒவ்வொரு அவயத்திலும் குண்டுகளைத் தேடி, கைகளால் பரிசோதனை செய்யும் படலம் நடக்கும். இத்தகைய சோதனைகளும், அந்தக் கட்சி மீதான மக்களின் அதிருப்திக்கு மிக முக்கிய காரணம். தற்போது நல்லவேளையாக அந்தக் கெடுபிடிகள் அங்கில்லை. அதேபோன்று இராணுவ முகாம்களையும் போருக்குப் பின்னர், அதுவும் மைத்திரியின் ஆட்சிக்குப் பின்னர், எந்தவித சோதனைகளும் இன்றிக் கடக்க முடிகின்றது.

அவ்வப்போது பொலிஸாரின் சோதனைகளை மட்டும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அதுவும் உடற்பரிசோதனை என்பது இல்லவே இல்லை. கஞ்சா கடத்தல் தொடர்பான சந்தேக நபர்களிடம் மட்டும் இவ்வாறான உடற்பரிசோதனை நடைபெறும்.

முன்னைய காலங்களில், மக்களை உடற்பரிசோதனை என்ற பெயரில் படைத்தரப்பு இம்சைப்படுத்தும் போது, அதற்கெதிராக நாடாளுமன்றத்தில் கூட எதிர்ப்புக் குரல் கொடுத்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ஆனால் அதே கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் – அதுவும் தமிழ் மக்களின் பிரதேசத்தில் நடைபெறும் கூட்டத்தில் –மக்கள் மீது பொலிஸாரையும்,அதிரடிப்படையினரையும் ஏவி, உடற்பரிசோதனை செய்த பின்னரே அனைவரும் உள்ளே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் இலங்கையை ஆட்டிப்படைத்த மகிந்த கூட, கூழைக் கும்பிடு போட்டபடி மக்களின் வீடுகளுக்குச் சென்று வாக்குக் கேட்பதே வழக்கம். ஆட்சி கையில் கிடைத்த பின்னர் தான், அதிகாரத் திமிர் அரசியல்வாதிகளுக்கு வரும். ஆனால் இங்கோ, எந்தத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்கிறதோ அதே தமிழ் மக்களை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கூட அடிமைகளைப் போலவே கூட்டமைப்பு நடத்தியிருக்கிறது.

இந்தக் காலத்திலேயே இப்படி நடப்பவர்கள், ஒரு வேளை தேர்தலில் அமோக வெற்றி பெற்றுவிட்டால் எப்படியெல்லாம் ஆடுவார்கள்? என்ற எண்ணம் அந்தக் கூட்டங்களுக்குப் போன மக்களுக்குத் தோன்றியிருக்கிறது. தன் வாக்குகளை தானே வலிந்து கெடுக்கும் வேலையை கூட்டமைப்பு ஏன் செய்கின்றது என்பது எவருக்குமே புரியவில்லை. ஏற்கனவே அரசின் தாளத்துக்கு ஆடுகின்றது எனவும்,மக்களுக்கு எதுவும் செய்வதில்லை எனவும் கூட்டமைப்பு மீது குற்றச்சாட்டுக்கள் உள்ள நிலையில், இப்போது அரச படைகளை வைத்து, மக்களை இம்சிக்கும் வேலையையும் கூட்டமைப்புச் செய்கின்றது என்ற அவப்பெயரை அவர்களாகவே ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால யாழ்ப்பாணத்தில் கலந்து கொள்ளும் கூட்டங்களில் கூட, இப்படியான கெடுபிடிகள் இருந்ததில்லை. போகிற போக்கைப் பார்த்தால், அடுத்த கூட்டங்களில் மக்களிடம் அடையாள அட்டையைக் கூட கூட்டமைப்பினர் பொலிஸாரை வைத்துக் கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. கூட்டமைப்பின் வீழ்ச்சிக்கு வேறெவரும் குழி தோண்டத் தேவையில்லை. அவர்களாகவே தோண்டிக்கொண்டிருக்கிறார்கள்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# தபால் மூலம் வாக்களிக்காதோருக்கு இறுதிச் சந்தர்ப்பம் இன்றும் நாளையும்

கொழும்பு, பெப். 01

தபால் மூலம் வாக்களிக்கத் தவறியவர்கள் இன்றும் நாளையும் வாக்களிக்க முடியும் எனப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

வாக்களிக்கத் தவறியவர்கள் தமது மாவட்டங்களில் உள்ள தேர்தல் அலுவலகங்களுக்குச் சென்று தபால் மூலவாக்கைப் பதிவு செய்ய முடியும்.

தபால் மூலம் வாக்களிக்காத பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாளை தங்களின் அலுவலகங்களில் வாக்கைப் பதிவு செய்ய முடியும். இன்றும் சந்தர்ப்பத்தைத் தவற விடும் பொலிஸார் தமது மாவட்டங்களின் தேர்தல் அலுவலகங்களில் வாக்குகளைப் பதிவு செய்ய முடியும்.

இதேவேளை வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கை 82 சதவீதம் முடிவடைந்து விட்டது என தபால் மா அதிபர் ரோஹண அபேரத்ன தெரிவித்தார்.

சுதந்திர தினமான வரும் 4 ஆம் திகதியும் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் இடம்பெறும் என்றும் அவர் கூறினார். (ச)

# பிரிட்டன் இளவரசர் எட்வேர்ட் நேற்று இலங்கை வந்தடைந்தார்

கொழும்பு, பெப். 01

70 ஆவது சுதந்திர தின விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்துக்கொள்வதற்காகப் பிரிட்டன் இளவரசர் எட்வேர்டும், இளவரசி பொஷியும் நேற்று இலங்கை வந்தனர்.



இவர்கள் நேற்று நண்பகல் 12.40 மணியளவில் எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான ஈ.கே. 348 என்ற விமானமூலம் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தனர்.

எதிர்வரும் 5ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் இவர்கள் இன்று கண்டி தலதா மாளிகைக்கும், பேராதனை தாவரவியல் பூங்காவுக்கும் செல்கின்றனர்.

வரும் 3ஆம் திகதி இரத்மலானையில் அமைந்துள்ள பார்வையற்றோர் பாடசாலைக்குச் சென்று மாணவர்களின் கலைநிகழ்வுகளைப் பார்வையிடுவர். (ச)

# பேஸ்புக் பயனாளிகளுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, பெப். 01

பேஸ்புக் பயனாளிகள் பாதுகாப்பு விடயத்தில் அதிகம் கவனம் செலுத்துமாறு கணனி அவசரப் பிரிவின் பாதுகாப்புப் பொறியியலாளர் றொசான் சந்திரகுப்தா எச்சரித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் இது தொடர்பில் 250 முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன எனத் தெரிவித்த அவர், பேஸ்புக் பயனர்கள் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய கூடுதல் கவ்னம் செலுத்த வேண்டும்.

தங்களின் ஒளிப்படங்களை பேஸ்புக்கில் வெளியிடும் போது 'நண்பர்கள் மட்டும்' பிரிவின் கீழ் வெளியிடுமாறும் அவர் தெரிவித்தார்.

பேஸ்புக் பயனர்கள், தனிப்பட்ட முறையில் அறியப்பட்டவர்களிடமும், அறியப்படாதவர்களிடமும் இருந்து வரும் நட்பு கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வது தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் போலி பேஸ்புக் கணக்கு தொடர்பில் 3,400 முறைப்பாடுகள் கணினி அவசர பிரிவிற்கு கிடைத்துள்ளது.

தங்கள் சொந்த படங்களை வேறு நபர்கள் தவறாக பயன்படுத்தி போலி கணக்குகள் திறந்துள்ளதாகவே அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடத்தில் 80 சதவீதமான போலிக் கணக்குகளை பேஸ்புக் தலைமையகம் முடக்கியுள்ளது என்றும் குப்தா மேலும் சொன்னார். (ச)

# யாரின் குடியுரிமையை யார் பறிப்பது

## மகிந்த கோபக்கனல்

கொழும்பு, பெப். 01

எனது குடியுரிமையை பறிப்பது குறித்து இன்று பேசுகின்றார்கள். எதிர் காலத்தில் அவர்கள் தங்கள் குடியுரிமையை பாதுகாக்க நேரிடும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கோபக்கனல் வீசியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றவாளியாக இனங்காணப்பட்டால் ஏழு ஆண்டுகளுக்கு குடியுரிமை இல்லாது போகும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அமைச்சரின் கருத்துக்கு நேற்று மஹரகமவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பதில் வழங்கியுள்ளார்.

என்னுடைய குடியுரிமையை பறிப்பது குறித்து இன்று அதிகளவில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனது குடியுரிமை தொடர்பில் மத்திய வங்கிக்கு குற்றச்சாட்டிற்கு தொடர்புடைய நபர்கள் கருத்து வெளியிடுகின்றார்கள். எனினும் எதிர்வரும் காலங்களில் அவர்கள் தங்கள் குடியுரிமையை பாதுகாத்து கொள்ள நேரிடும்- என்றார். (ச)

# இவர்களின் கோமாளி அரசியலுக்காகவா வீரர்கள் இரத்தம், சதையை ஆகுதியாக்கினர்

யாழ்ப்பாணம், பெப். 01

எங்களை ஏமாற்றி அரசியல் நடத்தும் நிலைமை இங்கு இருக்கக்கூடாது. கடந்த 30 வருடங்களாக விடுதலைப் போராட்டம் நடைபெற்றது.

இவர்கள் கோமாளி அரசியல் நடத்துவதற்காக தங்கள் இரத்தத்தையும் சதையையும் வீரர்கள் ஆகுதியாக் கினார்கள் எனக் கேள்வி எழுப்பி யிருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாநகர முதல்வர் வேட்பாளர் வி.மணிவண்ணன்.

நேற்று நல்லூர் பிரதேசத்தில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மேலும், மக்கள் நம்பி வாக்களித்தவர்களே இன்று அவர்களின் கூட்டங்களில் உங்களிடம் அடையாள அட்டை கேட்கிறார்கள், உங்கள் உடல்களைப் பரிசோதனை செய்கிறார்கள். விசேட அதிரடிப் படைப் பாதுகாப்போடு உலாவுகிறார்கள். ஆனால் மேடைகளில் ஏறியவுடன் இராணுவத்தை அகற்றவேண்டும் என முழங்குகின்றார்கள். இவ்வளவு காலமும் நம்பி நம்பி ஏமாந்து போன இந்த அரசியல் சூழல் மாற்றப்படவேண்டும். இங்கு புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்படவேண்டும்.

அரசியல்வாதிகள் மேடையில் ஏறிநின்று கவர்ச்சிகர அரசியல் வசனங்கள் பேசி மக்களை உசுப்பேற்றுவதும் மக்கள் கீழே இருந்து கைதட்டுவதும் பின்னர் வாக்களித்துவிட்டு அரசியல் செயற்பாட்டிலிருந்து ஒதுங்கிவிடுவதும்தான் காலகாலமாக நடந்து வருகின்றது. மக்கள் வெறும் வாக்காளர்களாக இல்லாமல் அரசியரல் செயற்பாட்டாளர்களாக மாறினால் தான் எமது தேசியக் கொள்கைகளையும் மக்களின் அபிலாசைகளையும் முன்கொண்டு செல்ல முடியும்.

இதுவரை காலமும் தமிழ் மக்கள் ஆதரித்த தரப்பு இன்று தேர்தல் தொடங்க முதலே என்ன செய்தது என்பது அனைவருக்கும் தெரியும். பதவி வெறியால் ஒருவரை ஒருவர் தாக்கியதும், வசைபாடியதும்தான் நடந்தது. உள்ளூராட்சி சபைகளை ஆட்சிசெய்தபோது என்ன செய்தார்கள் என்பதும் மக்களுக்குத் தெரியும். தங்களது உறுபினர்களை தாங்களே தாக்கினார்கள். தங்கள் தவிசாளர்கள் மீது ஈ.பி.டி.பியுடன் இணைந்து தாங்களே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார்கள். இப்படியான ஒரு நிலையையா மீண்டும் உருவாக்கப்போகின்றோம் என்பதை மக்கள் சிந்திக்கவேண்டும்" - என்றார். (ச)

## இன்று நாளும் கோளும்

01.02.2018 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 19 ஆம் நாள்
பிரதமை பி.ப. 05.59
இராகுகாலம் 1.30 - 03.00
ஆயிலியம் பி.ப. 05.14 வரை
சுபநேரம் காலை 10.30 - 11.30
அமிர்தயோகம்
எமகண்டம் பி.ப. 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சினம் | பிரயாணம் | உறுதி | உயர்வு | தனம் | பாசம் | இன்பம் | பெருமை | மேன்மை | நிம்மதி | ஆதரவு | ஆக்கம் |

# விபத்தில் சிறுமி உயிரிழப்பு

மன்னார், பெப். 01

மன்னார் முருங்கனில் இடம் பெற்ற விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

சிலாவத்துறை நோக்கிச் சென்ற ட்ரக்டர் சைக்கிளுடன் மோதியே இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில், சைக்கிளில் பயணித்த சிறுமி விபத்தில் படுகாயமடைந்த நிலையில் சிலாவத்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

அகத்திமுருத்து பிரதேசத்தைச் சேர்ந்த 10 வயதுடைய சிறுமி ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் ட்ரக்டர் சாரதி கைது செய்யப்பட்டுள்ள துடன், சிலாவத்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ச)



மன்னார் பேசாலை பொலிஸ் நிலையத்தினை பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர நேற்று திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம்.

நாடளாவிய சுற்றிவளைப்பு

# 1,670 பேர் கைதாகினர்



கொழும்பு, பெப். 01

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 1,670 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணி தொடக்கம் நேற்று அதிகாலை 3 வரை 1308 வீதித் தடைகளை ஏற்படுத்திப் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது, பிடியாணைப் பிறப்பிக்கப்பட்ட நிலையில், 397 பேரும், மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் கீழ் 719 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், சட்டவிரோதமாக துப்பாக்கிகளை வைத்திருந்த 5 பேரும், மேலும் பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 554 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ச)

அதிபரை முழந்தாளிடச் செய்த விவகாரம்:

# கண்டித்து ஹற்றனில் மக்கள் பெரும் எதிர்ப்புப் போராட்டம்




ஹற்றன், பெப். 01

பதுளை முதலமைச்சர் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு எதிராகப் பொதுமக்கள் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்றத் தடையை மீறி நடந்த இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர். அத்துடன் மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ், மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சோ.ஸ்ரீதரன், உதயகுமார், ஆர்.இராஜாராம், சரஸ்வதி சிவகுரு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அதிபர் பவானி ரகுநாதன் முழந்தாளிட்ட சம்பவத்துக்குக் காரணமானவர்களை பதவி நீக்கம் செய்யவேண்டும் என வலியுறுத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் ஹற்றன் மல்லியப்பு சுற்றுவட்டம் முன்பாக நேற்று மதியம் 12.30 மணியளவில் ஆரம்பமானது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பதாதைகளை ஏந்தி, எதிர்ப்பு கோஷங்களையும் எழுப்பினர். சுமார் ஒரு மணி நேரம் இந்த ஆர்ப்பாட்டம் நீடித்திருந்தது.

இதேவேளை,வீதியை மறித்து போராட்டம், ஊர்வலம் என்பவற்றை நடத்த ஹற்றன் பொலிஸார் நீதிமன்றில் தடையுத்தரவு பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ச)

# வறுமையில் உழலும் தேராவில் மக்கள்

முல்லைத்தீவு, பெப். 01

தேராவிலில் 200 வீட்டுத்திட்டத்தில் வாழும் மக்கள் தொழில் வாய்ப்பின்மை மற்றும் அடிப்படை வசதிகளின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் தேராவிலில் 200 வீட்டுத் திட்ட கிராமம் உள்ளது. இங்கு வசிப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் நிரந்தர தொழில் இல்லாதவர்கள். அத்துடன் போரால் பாதிக்கப்பட்டவர்கள்.

பெண் தலைமைக் குடும்பங்களே அதிகளவில் வசிக்கின்றன. இவர்களுக்கு நிரந்தர வருமானம் தரும் தொழில் வாய்ப்பில்லை. வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளக் கூடிய நிலங்களோ அல்லது கிணறு வசதிகளோ இல்லாத நிலையில் அல்லலுறுகின்றனர்.

இதேவேளை, வறுமை காரணமாக இக்கிராமத்தில் உள்ள ஒரு சில குடும்பங்கள் சட்டவிரோத செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர் என அப்பகுதியைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன், இக்குடும்பங்கள் நுண் கடன் நிதி நிறுவனங்களிலிருந்து அதிக வட்டிக்கு கடன்களைப் பெற்று அதனை மீள செலுத்த முடியாது பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர் என்றும் தெரிய வருகின்றது. (ச)

# நழுவ முயன்ற முதல்வருக்கு ஆணைக்குழு கிடுக்கிப்பிடி

கொழும்பு, பெப். 01

விசாரணைக்கு சமுகமளிக்காது நழுவ முயன்ற முன்னாள் ஊவா முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்கவுக்கு கிடுக்கப்பிடி போட்டது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

பதுளை பாடசாலையின் பெண் அதிபரை முழந்தாளிட செய்த குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன் இன்று விளக்கமளிக்குமாறு ஊவா முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இன்றையதினம் தேர்தல் பிரசாரப் பணியில் ஈடுபட வேண்டும் என்பதால் விசாரணைக்கு வரமுடியாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அவர்தெரிவித்திருந்தார்.

ஆனால், இதை நிராகரித்த ஆணைக்குழு, யதார்த்த பூர்வமான காரணங்கள் எதுவும் இன்றி விசாரணைக்கு சமுகமளிக்காது விட்டால் அது தண்டனைக்கு உரிய குற்றமாகக் கருதப்படும் எனவும் இன்றைய தினம் அவர் சமுகமளிக்க வேண்டும் எனவும் எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

# சுற்றுலாத்துறையின் கேந்திரமாக மன்னாரை மாற்றியமைப்போம்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



மன்னார், பெப். 01

மன்னாரை சுற்றுலாத்துறையின் கேந்திரமாக மாற்றியமைக்க தாம் முயற்சிகளை எடுத்து வருவதாகத் தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.


மேலும், மன்னாரில் இருந்து இடம் பெயர்ந்து புத்தளம், இந்தியாவில் வசிப்பவர்களை மீள்குடியேற்றவும், இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார் எனக் கூறினார்.


மன்னார் மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மன்னார் பஸ் நிலையத்தில் நேற்று பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு பிரசாரம் செய்தபோதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அரசியலில் பெண்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது ஐக்கிய தேசிய முன்னணி அரசே. ஜனாதிபதியுடன் கைகோத்ததாலேயே இந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் மகிந்த ராஜபக்சவின் காலத்தில் இத்தகைய ஒற்றுமை இருக்கவில்லை. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை ஐக்கிய தேசிய முன்னணியில் கீழ் கொண்டு வந்ததாலேயே'சமாதானத்தைக் கொண்டு வர முடிந்தது. அதை ஏற்படுத்தியவர்கள் நாமே.

2015 இல் நாட்டைப் பொறுப்பேற்றபோது கடன் சுமையால் தள்ளாடிக் கொண்டிருந்தது. கடனை மீள செலுத்த அரசாங்கத்தின் வருமானம் போதாது இருந்து - மிகவும் குறைவாக இருந்தது. ஆனால் இப்போது நிலைமை மாறியிருக்கிறது. கடனை செலுத்தும் நிலையை உருவாக்கியுள்ளோம். நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்ற எண்ணம் எமக்கு இருந்ததாலேயே இதை சாதித்தோம். மன்னாரை சுற்றுலாத்துறையின் கேந்திரமாக மாற்றியமைக்க நாம் முயற்சிகளை எடுத்து வருகிறோம். இதன் மூலம் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியடையும் - என்று அவர் கூறினார்.

அமைச்சர் ரிசாட் பதியுதீன், மீள்குடியேற்றம் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சுவாமிநாதன் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ச)





# ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள்குடியேற்ற அமைச்சு பொறுப்பேற்கும்

முல்லைத்தீவு, பெப். 01

முல்லைத்தீவு ஓட்டுத்தொழிற்சாலையை மீள்குடியேற்ற அமைச்சு கையேற்கும் சாத்தியம் உள்ளது என அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

போர் காரணமாக முல்லைத்தீவில் இயங்கிய ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை உட்பட பெரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகள் செயலிழந்தன.

பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை செயலிழந்தமையால் 85இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. போர்முடிவுக்கு வந்து 8 ஆண்டுகள் கடந்தபோதும் இந்தத் தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

தொழிற்சாலையால் வேலை வாய்ப்புகளைப் பெற்றவர்கள் தற்போதும் தொழிலின்றி வாடுகின்றனனர். அத்துடன் மாவட்டத்துக்கான வருமானமும் இல்லாது போய்விட்டது.

இதனை மீள இயங்க வைக்க பாரம்பரிய சிறு கைத்தொழில் அமைச்சு, வர்த்தக வாணிப அமைச்சு, கூட்டுறவுத்திணைக்களம்'என்பன தொழிற்சாலையை உள்வாங்கின. ஆனால் அதன் கட்டுமானப் பணிகள்கூட முன்னெடுக்கப்படவில்லை.

இந்த ஆண்டிலாவது தொழிற்சாலையை இயங்க வைக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. எனினும் எந்த முயற்சிகளும் நடக்கவில்லை எனக் கூறிய அவர், போரால் கைவிடப்பட்ட தொழிற்சாலைகளை இயங்க வைப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சு முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

இந்த அடிப்படையில் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை மீள்குடியேற்ற அமைச்சு கையேற்கும் சாத்தியம் உள்ளது - என்றார். (ச)

# பிணைமுறி மோசடி விவகாரம்: பலிக்கடா ஆக்கப்பட்டார் ரவி

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 01

பிணைமுறி விவகாரத்தில் ரவி கருணாநாயக்க பலிக்கடா ஆக்கப்பட்டுள்ளார் என சுதந்திர மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான அமைப்பான கபே தெரிவித்துள்ளது.

கொழும்பில் கபே அமைப்பின் சார்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் பேசிய அவ்வமைப்பின் தலைவர் கீர்த்தி தென்னகோனே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“பிணைமுறி விவகாரத்தில் பெரியளவிலான நிதி மோசடி நடத்தப்பட்டுள்ளது. அதற்குப் பின்னணியில் அரசியல் புள்ளிகள் பலர் இருக்கின்றனர். எனினும் களங்கத்தில் இருந்து தம்மை விலக்கிக்கொள்ளவும் தண்டனைகளில் இருந்து தப்பவும் அவர்கள் ரவி கருணாநாயக்கவை பலிக்கடா ஆக்கியிருக்கிறார்கள்.

“பிணைமுறி விசாரணை அறிக்கையில், அர்ஜூன் அலோஷியஸிடம் இருந்து ரவி கருணாநாயக்க சில பல வசதிகளைப் பெற்றுக்கொண்டதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அதன் மூளையாகச் செயற்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்காக, திலக் மாரப்பன தலைமையிலான ஐ.தே.க. குழு, ரவி கருணாநாயக்கவை தியாகம் செய்துள்ளனர்.”-என்றார்.(ச)

# மாமியாரை அடித்து கொன்றார் மருமகன்

கொழும்பு, பெப். 01

மாமியாரை பொல்லால் அடித்து கொலை செய்துவிட்டுத் தலைமறைவான மருமகனை கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நாவலபிட்டி நவ திஸ்பன கிராமத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அனுலாவதி வயது 65 என்ற பெண்ணே இவ்வாறு கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக மண்வெட்டிப் பிடியால் மருமகன் மாமியாரைத் தாக்கினார். இதிலேயே அவர் மரணமானார். (ச)

# தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு: வடக்கு, கிழக்கில் பாதுகாப்பு தீவிரம்

யாழ்ப்பாணம், பெப். 01

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்தமையால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி நடக்கவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரங்கள் தீவிரமடைந்துள்ளன. இந்நிலையில் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள், கட்சித் தேர்தல் அலுவலகங்கள் மீதான தாக்குதல்களும் அதிகரித்துள்ளன.

வடக்கு, கிழக்கில் அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தி வருவதுடன், வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்கும் பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், வாக்கு சேகரிப்பில் ஈடுபடும் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தாக்கப்படும் சம்பவங்கள், வடக்கில் அதிகம் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, கிழக்கில் வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும், தேர்தல் செயலகங்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் அதிகளவில் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில், விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில், வடக்கு, கிழக்கில் குறிப்பாக, யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக பொலிசாரும், சிறப்பு அதிரடிப்படையினரும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் தேர்தல் சட்டங்களை மீறுவோர் பிணையில் விடுவிக்கப்படமாட்டார்கள் என்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் எச்சரித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நேவி சம்பத் கைதுக்கு உதவுங்கள் மக்களிடம் சி.ஐ.டி. கோரிக்கை

கொழும்பு, பெப். 01

மாணவர்கள் உட்பட 11 பேரைக் கொன்றார் என்ற வழக்கில் தேடப்பட்டு வரும் ‘நேவி சம்பத்’தைக் கைது செய்ய உதவுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மக்களைக் கேட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து 5 மாணவர்கள் உட்பட 11 பேரை கடத்திச் சென்று கப்பம் கோரிப் பின்னர் கொலை செய்த விவகாரத்தில், கடற்படையின் லெப்டினன்ட் கொமாண்டர் பிரசாத் சந்தன ஹெட்டி ஆராச்சி அல்லது நேவி சம்பத் என்பவருக்குத் தொடர்பிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதன் பேரில், அவரைக் கைது செய்ய பொதுமக்களின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர். தலைமறைவாகியுள்ள சந்தேக நபரைக் கைது செய்ய கோட்டை நீதிவான் திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளார். இந்த நிலையிலேயே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

1977 பெப்ரவரி 9ஆம் திகதி பிறந்த சந்தேகநபர், வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர். அவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள், குற்றப் புலனாய்வுப் பிரிவின் மேற்பார்வை மையத்தின் 011 242 2176 எனும் இலக்கத்துக்கோ குற்றப் புலனாய்வுப் பிரிவின் 011 232 0141-45 எனும் இலக்கத்துக்கோ குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைப் பிரிவின் 011 239 3621 எனும் இலக்கத்துக்கோ அறிவிக்க முடியும். (ச)



# ஆரியக் கூத்து ஆடினாலும் காரியத்திலை கண்ணிருக்க வேணும்!

இப்ப காலமையிலை பனியில்லாட்டிலும் குளிராத்தான் கிடக்கு. உருளைக் கிழங்குக்குத் தான் திறம். ஆனால் புகையிலைக்கு எப்பிடி எண்டு சொல்லேலாமைக் கிடக்கு. மழை முன்னும் பின்னுமா வந்ததாலை புகையிலைக் கண்டுகள் சில இடங்களிலை சிறுசாயும், சில இடங்களிலை வளத்தியுமா கிடக்கு. வளரட்டும் எப்பிடி எண்டு பாப்பம்.

அது ஒரு பக்கமாக் கிடக்கட்டும். இவ்வளவு நாளும் விளையாடினது மாதிரி இனி விளையாடேலாது. எலக்சன் நாள் கிட்டக் கிட்ட வந்திட்டுது. இப்ப எல்லாம் வெள்ளண எழும்பேக்கையே வீட்டு முகப்பிலை முழுவியளத்துக்கு ஒரு கட்சிப் போஸ்டரைத் தான் பாக்கிறனாங்கள். போஸ்டர்கள் கனக்க ஒட்டிக் கிடக்கு. அதிலை சிலபேர்தான் பழைய ஆக்களாக இருக்கினம். பலரைத் துப்பரவா ஒருத்தருக்கும் தெரியாமல் கிடக்கு. என்னெண்டு உவை வோட்டு வாங்கப் போகினம் எண்டு தெரியேல்லை. முன்பின் தெரியாத உவையளை நம்பி ஆர் வோட்டைப் போடப்போகினம் எண்டு முதலி கேக்கிறான். ஆனால், அவைக்குள்ளையும் நல்ல ஆக்கள் இருப்பினம். பாத்துப் போட்டு அவையளையும் முகப்புக்குக் கொண்டு வரவேணும் எண்டதும் எங்கடை கடமை. கலிகாலத்திலை எல்லாம் தலை கீழாத்தான் நடக்கும் எண்டு சொன்னது உண்மைதான்.

இதுக்கிடையிலை வலிந்து காணாமல் போனவர்களைக் கண்டறியும் சங்கம், தமிழ் அரசியல்வாதிகள் எல்லாம் எங்களுக்குத் துரோகிகள் எண்டு சொல்லியிருக்கினம். அவை என்னத்தை வைச்சு அப்பிடிச் சொல்லியிருக்கினம் எண்டால், அரசியல்வாதியள் விலாங்கு மீனைப்போலை தமிழ் பகுதிக்கு வந்து ஒரு முகத்தைக் காட்டுவினம். சிங்களப் பகுதிக்குப் போய் இன்னுமொரு முகத்தைக் காட்டுவினம். ஆனால் கள்ளத்தனமா அரசாங்கத்தின்ரை திருகுதாளத்துக்குக் கை உயர்த்தி எல்லாவித ஆதரவையும் குடுத்துக் கொண்டு அவை செய்யிற எல்லாத்துக்கும் சப்போட் பண்ணுவினம். தமிழ் அரசியல் கட்சியா இருந்து அவை உதைத்தான் சாதிச்சவை. உவையைத் திருத்தேலாது. பாரதிராஜா தன்ரை படத்துக்கு புது முகத்தை அறிமுகப் படுத்திறதைப் போலை நாங்களும் அரசியலுக்குப் புதுமுகத்தைக் கொண்டு வாறது தான் ஒரு வழி. வேறை வழி இல்லை.

சுமந்திரனையும், ஸ்ரீதரனையும், சம்பந்தனையும் குறை சொல்லிக் கொண்டிருக்கிற சிவசக்தி ஆனந்தன் இதுவரைக்கும் என்ன செய்தவர்? இப்ப கன்னை பிரிச்சு அடிபடத்துவங்கினாப் பிறகுதான் அவை இரண்டை வேண்டினவை. மூண்டை வேண்டினவை எண்ட புதுசா ஒரு வியாக்கியானம்.

இப்ப அவர் ஒரு புதுக்கதையோடை வந்திருக்கிறார். “சுன்னாகம் மக்களின் குடிநீரில் எண்ணெய் கலக்க மாவை சேனாதிராஜா எம்.பி தான் காரணம்.” – எண்டு ஒரு புதுக் கண்டுபிடிப்பொண்டைச் செய்திருக்கிறார். உந்தக் கதையைக் கொஞ்சம் முன்னாலை சொல்லி இருந்தால் அல்லது அதைப் பற்றின ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்புகளும் நடக்கேக்கை சொல்லி இருந்தால் ஓரளவு கேட்டிருக்கலாம். இப்ப ஆறிப்போய், ஐங்கர நேசனைப் பற்றிக் கண்டபடி எல்லாம் சனம் கதைக்க விட்டிட்டு இப்ப சொன்னால், சேர்ந்து செய்யேக்கை எல்லாம் சரியெண்டு ஒத்துச் செய்தனீங்கள்?. பிரிஞ்சு அடிபடேக்கைதான் ஆளை ஆள் பரிகாசம் பண்ணுறதும், கள்ளப் பட்டம் கட்டுறதும். உவர் சொன்ன இரண்டு கோடி எண்ட கதை பறவாயில்லை. அரசாங்கம் தங்கடை வரவு செலவுத் திட்டத்துக்குச் சப்போட் பண்ணுறதுக்காகக் குடுத்தது. ஆனால் சுன்னாகம் தண்ணிக் கதை எல்லாம் பழுங்கஞ்சி. ஆறிப்போச்சுது; சபைக்கு உதவாது. பிச்சைக்காரனும் வேண்டாம் எண்டிடுவான்.

மகிந்தாவைக் குடும்ப அரசியல் செய்தவர், அரசாங்கத்தின்ரை காசைக் களவெடுத்தவர் எண்டு கத்திக் குளறிக் குத்தி முறிஞ்சவை எல்லாரும் இப்ப தங்கடை வாரிசுகளை அரசியலுக்கை கொண்டு வந்திருக்கினம். மாவை அண்ணையும் மேனைக் கொண்டு வந்திருக்கிறார். வட மாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கத்தாரும் தன்ரை தமையனை அரசியலுக்கை கொண்டு வந்திருக்கிறார். முந்தி மகிந்தாவைப் பகிடி பண்ணிப் போட்டு அவைக்குச் சந்தர்ப்பம் வரேக்கை அவை செய்யிற விளையாட்டைப் பாருங்கோவன்.

என்னத்தைச் செய்தாலும் நான் அடிக்கடி சொல்லுற மாதிரி “ஆரியக் கூத்தாடினாலும், காரியத்திலை கண்ணா இருக்க வேணும்”. வோட்டுப் போடேக்கை தயவு செய்து அவை ஆச்சி அப்பூன்ரை காலத்து ஆக்கள். அவை என்ரை மனுசீன்ரை ஆக்கள். இவை சம்பந்த பகுதி எண்டு பாராதையுங்கோ. ஆர் நேர்மையனவை எண்டு பாருங்கோ. ஆர் ஊரை நல்லா வைச்சிருப்பினம் எண்டு பாருங்கோ. அவைக்குப் போடுங்கோ. கவனம் பிள்ளையள்.

- வில்லங்கம் விநாசி

# தந்தை செல்வாவின் சமஷ்டியை சைக்கிள் கட்சியே எதிர்த்ததாம்

முல்லைத்தீவு, பெப். 01


தந்தை செல்வா சமஷ்டி கோரிக்கையை முன்வைத்த போது சைக்கிள் சின்னத்தை சேர்ந்தவர்களே அதனை கடுமையாக எதிர்த்தனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அக்காலத்தில் சமஷ்டியை எதிர்த்தவர்கள் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டியை கைவிட்டு விட்டது என விமர்சிக்கின்றனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களை ஆதரித்து, முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாந்தி சிறீஸ்கந்தராசா, சித்தார்த்தன், மற்றும் ரொலோ கட்சியின் பொதுச் செயலாளர் சிறிகாந்தா ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட உரிமைப் போராட்டத்தின் மூலம் அனைவரும் பல பாடங்களைக் கற்றுக் கொண்டதாகவும் ஒரு இனத்தை அடக்கி ஒடுக்கி ஆட்சி புரிய முடியாது என்பதை இந்தப் போராட்டம் நிரூபித்தது எனவும் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

## கேலிச்சித்திரம்



# மெய்வன்மைப் போட்டி

உடுவில், பெப். 01

இணுவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று மதியம் ஒரு மணி தொடக்கம் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தொழிலதிபர் அ.கிருபாகரன் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் ப.பார்த்தீபன், உடுவில் கோட்டக் கல்வி அதிகாரி த. மாதவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

# தோன்றியது சுப்பர் நிலவு கண்டு களித்தனர் மக்கள்


யாழ்ப்பாணம், பெப். 01

வானவெளியில் 152 ஆண்டுகளுக்குப் பிறகு அபூர்வ நிகழ்வு நேற்று வானில் தென்பட்டது.

நேற்று ஏற்பட்ட முழு சந்திர கிரகணம் சிவப்பு நிலவு, சுப்பர் மூன், ப்ளூ மூன் என அனைத்தும் சேர்ந்து ஒரே கிரகணமாக காட்சியளித்தது.

இது போன்றதொரு வானியல் நிகழ்வு 1866 ஆம் வருடம் மார்ச் 31ஆம் தேதி நிகழ்ந்தது. அதன் பிறகு நேற்று தோன்றியது. இலங்கையின் வான்பரப்பில் தோன்றிய முழு நிலவு தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

நாட்டின் பல பாகங்களில் முழு நிலவு பல்வேறு வடிவங்களில் காட்சி கொடுத்துள்ளது. யாழ்ப்பாணம், கொழும்பு, மலையகம் என பல இடங்களில் இந்த அபூர்வ நிகழ்வை மக்கள் கண்டு களித்தனர். (ச)



# 2020 வரை ஜனாதிபதியுடன் பயணித்தே தீருவோம்

## பிரதமர் ரணில் உறுதி

கொழும்பு, பெப். 01

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து 2020 ஆம் ஆண்டு வரை ஐக்கிய தேசிய கட்சி பயணிக்கும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய அரசாங்கத்தின் ஒற்றுமையை உறுதிப்படுத்த ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானித்துள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு, பொலநறுவை கதுறுவெலப் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கொண்ட கட்சியாக, ஐக்கிய தேசிய முன்னணி உள்ளது. தேர்தலுக்கு பின்னர் மீண்டும் ஒற்றுமையாக இணைந்து பணியாற்றவுள்ளதாக குறிப்பிட்டார்.

மேலும், 2020 ஆம் ஆண்டு வரை அரசைப் பலப்படுத்தி, சிறந்த நாட்டை உருவாக்குவோம் என்ற அவர் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தமக்கு ஆணை வழங்க வேண்டும் என பிரதமர் மக்களிடம் கோரிக்கை விடுத்தார். (ச)

# வடக்கு, கிழக்குக்கு உதவுகிறது ஏ.டி.பி.

கொழும்பு, பெப். 01

வறுமையால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு நன்மைகள் கிடைக்கவென சில திட்டங்களை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று சந்தித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், கிராமிய வறிய மக்களுக்கு நன்மை கிடைக்கும் வகையிலான பல நோக்கத் திட்டங்களுக்கு தமது பங்களிப்பை வழங்க தயார் எனக் கூறினர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக நாட்டுக்கு வழங்கப்படும் உதவிகள் மற்றும் அதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ச)

# தொடர்ச்சிகள்

## கூட்டமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

நேற்று யாழ். இலங்கைவேந்தன் கலை கல்லூரியில் வேட்பாளர்கள், மக்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆனந்த சங்கரியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி 2004 ஆம் ஆண்டு பறிபோனது. ஆனால் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது கொழும்பில் வழங்கப்பட்ட பங்களாவை இன்றளவும் அரசாங்கத்திடம் மீள கையளிக்கவில்லை.

இப்படிபட்ட ஆனந்த சங்கரி தமிழ்தேசிய கூட்டமைப்பை நோக்கி விரல்நீட்டிப்பேசலாமா?

சுரேஸ் பிறேமச்சந்திரன் இவர் பிரதேச சபைகளில் தொடங்கி மாகாண சபை வரை ஊழலுக்கு பெயர்போன ஒருவர்.

மக்களுக்கு தெரியும் வலி. கிழக்கு, வல்வெட்டித்துறை பிரதேச சபைகளை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ வரன் எதற்காக கலைத்தார்?

சுரேஸ் பிறேமச்சந்திரனின், ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினருக்கு தலைவர் பதவி கொடுக்கப்பட்டது. அங்கே ஊழலையே செய்தனர். வடக்கு மாகாண சபையின் 4 அமைச்சர்கள். ஒரு அமைச்சர் மீது ஊழல் குற்றச்சாட்டு நிரூபணமானது. அவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஊடாகவே தேர்தலில் போட்டியிட்டுஅமைச்சரானவர். இப்படி ஊழலுக்கு பெயர் போனவர்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை நோக்கி விரல் நீட்டி பேசுவதற்கு கிஞ்சித்தும் தகுதியற்றவர்கள் - என்றார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'இன நல்லிணக்க நடவடிக்கை என்னும் பெயரில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1000 விகாரைகளை அமைக்க 50 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டிலிருந்த பொருள்கள் தூக்கி வீசப்பட்ட நிலையில் கிடந்தன. வீட்டில் இருந்த வீசப்பட்டும், அங்கும் இங்குமாகக் கலைந்தும் கிடந்தன. அங்கிருந்த ஒருதொகைப் பணமும் காணாமல் போயிருந்ததாகக் கூறப்படுகின்றது.

கொள்ளையிடும் நோக்கில் வீட்டுக்கு சென்றவர்கள் இக்கொலையைப் புரிந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச)

## இந்தியாவே...

(முதலாம் பக்க்த் தொடர்ச்சி)

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி வேட்பாளர்களை ஆதரித்துப் பேசிய அவர், இந்தியாவில் தங்கியிருந்த தன்னை 2008 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச கிழக்கில் தேர்தலை நடத்தப் போகிறேன் எனக் கூறி அழைத்தார்" என்று கூறியிருக்கிறார்.

காட்டிக் கொடுப்பின் பின்னர் இந்தியாவே அவருக்கு தஞ்சம் கொடுத்திருந்தது என்ற தகவல் வெளியான போதும், அது மறுக்கப்பட்டது. இந்நிலையில் கருணா கூறிய விடயம் வாக்குமூலமாகவே அமைந்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## கைதாகலாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணம் கோத்தபாய ராஜபக்ச செய்த மிக் கொள்வனவு தொடர்பான கட்டுரைகளை எழுதியமையே.

அது சிப்பாய் செய்த கொள்ளை. அந்தச் சிப்பாய் தற்போது நாட்டில் இல்லை. அமெரிக்காவுக்குத் தப்பியோடியுள்ளார். தேர்தல் முடிந்த பினனர், 12ஆம் திகதி இலங்கைக்கு வருகிறார். கைது செய்யப்படலாம் என்ற அச்சத்தில் அவர் நாட்டில் இருந்து தப்பிச் சென்றுவிட்டார். எனினும் அந்தச் சிப்பாயான கோத்தபாயவை கைது செய்ய அனைத்தும் தயார்.

அவரின் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் எதிர்காலத்தில் சிறை செல்வார்- என்றும் அமைச்சர் மேலும் சொன்னார். (ச)

## பேச்சுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் செயலாளர் நாயகமும் கூட்டமைப்பின் முக்கியஸ்தருமான என்.சிறிகாந்தா தெரிவித்தள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரைக் குறி வைத்து தாக்குகின்றனர். அதிலும் சுமந்திரனை அதிகம் தாக்குகின்றனர். காய்க்கிற மரத்துக்கு விழும் கல்லெறியாகவே இத்தாக்குதலைப் பார்க்கிறோம்.

அவர் மீதான தாக்குதலும் நேர்மையாக இல்லை. ஒரு வீட்டிற்குள் குழப்பங்கள் வருவது சகஜம் தான் இதேபோன்று தான் ஆரம்பத்தில் எமக்குள்ளும் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. ஆயினும் எமது மக்களின் நலன்கருதி நாங்கள் ஒற்றுமைப்பட்டோம். ஓரணியாக வருவோம் என்று கூறியவர்கள் சின்னத்தை ஏற்றுக் கொள்வதிலேயே முரண்பட்டு பிரிந்து நிற்கின்றனர். சின்னத்தை ஏற்கவே ஒற்றுமைப்படாதவர்கள் மக்களை எப்படி ஒன்றிணைக்கப் போகின்றனர் - என்றார். (ச)

எதிரொலி
Ethiroli



# டில்லி, காஷ்மீர் நேற்று குலுங்கின



புதுடில்லி, பெப். 01

இந்தியாவின் டில்லி, காஷ்மீர் பிரதேசங்கள் நேற்று நிலநடுக்கத்தால் குலுங்கின.

நேற்று மதியம் உணரப்பட்ட இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள், வீடுகள் குலுங்கின. அச்சத்தால் மக்கள் வீதி, திறந்த வெளிகளை நோக்கி ஓடினர்.

இரு இடங்களிலும் ஏற்பட்ட நிலநடுக்கம் 6.1 ரிக்டராகப் பதிவாகியது. (ச)

# ட்ரம்பின் கனவு அமெரிக்கா

## திறமையானோருக்கே கிறீன் கார்ட்

## ஐ.எஸ்ஸை தோற்கடிக்கும் வரை போர்

## சீனா மற்றும் ரஷ்யாவால் அச்சுறுத்தல்



வோஷிங்ரன், பெப். 01

மக்களுக்காக அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக மாற்றுவோம். மக்களின் நன்மைக்காக கருத்து வேறுபாடுகளை மறந்து எதிர்க்கட்சிகள் இணைந்து பணியாற்ற வேண்டும்.

- இப்படி அழைப்பு விடுத்திருக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப்.

அமெரிக்காவின் நாடாளுமன்ற கூட்டுக் குழுவை தொடக்கி வைத்து உரையாற்றிய போதே இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

அவர் தனது உரையில்,


திறமை அடிப்படையிலான குடியேற்ற முறையை அறிமுகப்படுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது. திறமையான, நமது சமூகத்திற்குப் பங்களிப்பு வழங்கக்கூடிய, நாட்டிற்கு மரியாதை அளித்து நேசிக்கக் கூடிய மக்களுக்கு மட்டுமே கிறீன் கார்ட் வழங்கப்படும். அவர்களே இந்த நாட்டிற்கு தேவை.

ஐ.எஸ். பயங்கரவாதிகள் தோற்கடிக்கப்படும் வரை அமெரிக்கா தொடர்ந்து போராடும். அமெரிக்காவை பலமும், நம்பிக்கையும் பொருந்திய நாடாக மாற்றியமைப்போம்.

உலக அளவில் பயங்கரவாத அமைப்புக்கள், சீனா மற்றும் ரஷ்யா போன்ற எதிரிகள் நமது பொருளாதாரம், தனித்தன்மை ஆகியவற்றுக்கு சவால் விடுவனவாக உள்ளன. பயங்கரவாதிகள் குற்றவாளிகள் அல்ல. சட்ட விரோத எதிரிகள். அவர்கள் உலகம் முழுவதையும் கைப்பற்றுவதற்குள் அவர்களை பயங்கரவாதிகளாகவே கருதி அழிக்க வேண்டும்.

வடகொரியாவில் சர்வாதிகாரத்தை விட கொடூரமான ஆட்சி நடக்கிறது. அணு ஆயுதங்களை வைத்து எம்மை மிரட்ட முயல்கிறார்கள். அப்படி நடப்பதற்குள் நாம் அவர்களுக்கு அதிக அழுத்தத்தை கொடுக்க வேண்டும். அவர்களை ஒடுக்க வேண்டும் - என்று மேலும் தெரிவித்தார். (ச)

# ஷாருக்கானின் மாளிகைக்கு ‘சீல்”



மகாராஷ்டிரா, பெப். 01

ஹிந்தி திரையுலகின் மெகா ஸ்ரார் ஷாருக்கானின் பண்ணை இல்லத்துக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

விவசாய நிலத்தில் மாளிகை கட்டினார் என்ற குற்றச்சாட்டிலேயே வருமானவரித் துறையினர் அவரின் இல்லத்துக்கு சீல் வைத்துள்ளனர்.

விவசாயத்துக்கு எனக் கூறி நிலத்தை வாங்கி, மாறாக மாளிகை கட்டியுள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்த மாளிகையின் மதிப்பு சுமார் 14.67 கோடி இந்திய ரூபா - நம் நாட்டு மதிப்பில் 35.5 கோடி ரூபாவாகும். (ச)

# அரச குடும்பங்கள் ஏய்த்த ரூ.16 லட்சம் கோடி பறிமுதல்

ரியாத், பெப். 01

அரச குடும்பத்தினர் அரசாங்கத்துக்கு செலுத்தாத 107 பிலலியன் அமெரிக்க டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 16.5 இலட்சம் கோடி ரூபாவை சவூதி அரேபியா பறிமுதல் செய்துள்ளது.

சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசரான் முஹமட் பின்சல்மான “தொலை நோக்கு 2030” என்ற புதிய திட்டத்தை முன்வைத்துள்ளார். இத்திட்டத்தின் பிரகாரம் சமூக, பொருளாதார கொள்கைகளில் பல மாற்றங்களை அவர் செய்து வருகிறார்.

இந்நிலையில் எண்ணெய் ஏற்றுமதியில் ஈடுபடும் அரச குடும்பத்தினர் ஊழல், வரி ஏய்ப்பில் ஈடுபட்டமை அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, இளவரசர் அல் வலித் பின் தலால் உட்பட 400 பேர் கைதாகினர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அவர்கள் அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய 107 பில்லியன் டொலர்கள் பறிக்கப்பட்டுள்ளன. (ச)

# பாலியல் தொல்லை: விவரம் வெளியிடுவேன்

## மிரட்டுகிறார் நடிகை பார்வதி



திருவனந்தபுரம், பெப். 01

பூ படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் பார்வதி. கேரளாவைச் சேர்ந்த இவர், நடிகைகளுக்கு எதிரான பாலியல் தொல்லைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஏற்படுத்திய குழுவில் அங்கம் வகிக்கிறார்.

நானும் இந்தப் பிரச்சினையை சந்தித்துள்ளேன். இதைக் கண்டும் காணாமல் சென்று விடுமாறு அப்போது எனக்கு சிலர் கூறினர். நடிகைகள் சந்திக்கும் பாலியல் தொல்லைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றே பல காரியங்களை செய்கிறோம்.

அவர்களின் முகத்திரையைத் தோலுரித்துக் காட்ட வேண்டும். எனக்குப் பாலியல் தொல்லை கொடுத்தவர்களின் பட்டியலை வெளியிடுவேன். விரைவில் அந்த வேலையைத் தொடங்குவேன் - என்றார். (ச)

# எலி போட்ட ‘சோப்’ குளியல்



லிமா, பெப். 01

எலி சவர்க்கார நுரையை உடலில் தேய்த்து குளிக்கும் வீடியோ சமூகவலைத் தளங்களில் வைரலாகி வருகின்றது.

பெரு நாட்டவரான டி.ஜே. ஜோஸ் கோரி குளியலறையின் தண்ணீர் தொட்டியில் எலி ஒன்று சவர்க்கார நீரால் உடலை சுத்தம் செய்வதைக் கண்டார். உடன் அதனை வீடியோவும் எடுத்து சமூகவலைத்தளத்தில் பதிவிட்டார்.

மனிதர்களைப் போன்று உடல் முழுவதும் சவர்க்காரத்தைத் தேய்த்துக் குளிக்கும் எலியின் வீடியோவை இதுவரை 37 இலட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

இது கிரபிக்ஸாக இருக்கும் எனப் பலர் கருதும் நிலையில், ஆய்வாளர்கள் எலி தனது உடலில் படிந்த சவர்க்கார நுரையைத் துடைக்க முயன்ற போது அது குளிப்பது போன்று தோன்றியிருக்கலாம் எனக் கூறினர். (ச)

# இந்தியா – பாகிஸ்தான் மீண்டும் ரயில் சேவை



இஸ்லாமாபாத், பெப். 01

இந்தியா - பாகிஸ்தான் எல்லையான காஷ்மீரின் கோடு பிரதேசத்தில் பாகிஸ்தான் இராணுவம் மோதல் நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், இரு நாடுகள் இடையேயும் தொடர்ந்து ரயில் சேவை நடத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இந்தியாவின் முனாயயோவில் இருந்து பாகிஸ்தானின் கோக்ராபர் வரை இந்த ரயில் சேவை இடம்பெறும்.

2006 இல் உருவான இந்த ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில் மேலும், 3 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இன்று தொடக்கம் வரும் 2021 டிசம்பர் 31 வரை இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும். (ச)

# யேமன் ஜனாதிபதியின் மாளிகை பிரிவினைவாதிகளால் முற்றுகை




ஏடன், பெப். 01

ஏடன் நகரில் இருக்கும் ஜனாதிபதி மாளிகை பிரிவினைவாதிகளின் முற்றுகைக்குள் உள்ளது. இதனால் பிரிவினைவாதிகளுக்கும் அந்நாட்டு இராணுவத்துக்கும் இடையே மோதல்கள் நீடித்து வருகின்றன.

முற்றுகைக்கு உள்ளான மாளிகைக்குள் ஜனாதிபதி, அவரின் குடும்பத்தவர்கள் தங்கியுள்ளனர். அறிவிக்கப்படாத முற்றுகைக்குள் அவர்கள் அகப்பட்டுள்ளனர். இந்த மோதல்களில் சிக்கி 36 பொது மக்கள் உயிரிழந்தனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யேமனின் தெற்குப் பிரதேசத்தைத் தனி நாடாக அங்கீகரிக்குமாறு போர் இடம்பெற்று வருகின்றது. பிரிவினைவாதிகளின் பிடியில் இருக்கும் பிரதேசங்களை விடுவிக்க இராணுவம் அண்மையில் போரை ஆரம்பித்தது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி மாளிகையை பிரவினைவாதிகள் முற்றுகைக்கு உட்படுத்தி உள்ளனர். ஏற்கனவே யேமனின் தலைநகரான சனா பிரிவினைவாதிகள் வசமான நிலையில் ஏடனில் இருந்தே நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இப்போது ஏடனும் பிரிவினைவாதிகள் வசமாகியிருப்பது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி உள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச)

# டாக்காவில் வைத்து இலங்கைக்கு தண்ணி காட்டிய பங்களாதேஷ்!



டாக்கா, பெப். 01

இலங்கைக்கு எதிராக நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியில், இலங்கைப் பந்துவீச்சாளர்களுக்குத் தண்ணி காட்டிய பங்களாதேஷ் அணி, முதல் நாள் ஆட்டநேர முடிவில் நான்கு விக்கெட்டுகள் இழப்புக்கு 374 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

பங்களாதேஷ் சென்றுள்ள இலங்கை அணி இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட் போட்டி சிட்டகொங் மைதானத்தில் நேற்றுத் தொடங்கியது. இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி பங்களாதேஷ் அணியின் தொடக்க வீரர்களாக தமிம் இக்பாலும், இம்ருல் கயீசும் களமிறங்கினர். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். அரைச்சதம் அடித்த இக்பால் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 72 ஓட்டங்களைச் சேர்த்தது. அதைத்தொடர்ந்து மொமினுல் ஹக் களமிறங்கினார். கயீஸ் 40 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் மொமினுல் ஹக்குடன் முஷ்பிகுர் ரஹிம் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பொறுப்புடன் விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தது. மொமினுல் சதம் அடித்தார். எதிர்முனையில் விளையாடிய ரஹிம் 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார். மொமினுல் ஹக் - முஷ்பிகுர் ரஹிம் ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 236 ஓட்டங்களைச் சேர்த்தது. அதைத் தொடர்ந்து களமிறங்கிய லிட்டன் தாஸ் முதல் பந்திலேயே 'டக் அவுட்'ஆனார்.

பங்களாதேஷ் அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 374 ஓட்டங்கள் குவித்துள்ளது. மொமினுல் ஹக் 175 ஓட்டங்களுடனும், மஹ்மதுல்லா 9 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இலங்கை அணி சார்பாகப் பந்துவீச்சில் சுரங்க லக்மல் 2 விக்கெட்டுகளையும், தில்ருவான் பெரேரா, லக்ஷன் சந்தகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாளாகும்.

(ஐ)



# இந்திய-தென்னாபிரிக்க ஒருநாள் சமர் இன்று

டர்பன், பெப். 01

இந்திய - தென்னாபிரிக்க அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டி டர்பன் மைதானத்தில் இன்று நடக்கவுள்ளது.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்தியக் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட்கள் கொண்ட தொடரை இந்திய அணி 1-2 என்ற கணக்கில் இழந்தது.

இந்நிலையில், 6 ஒருநாள் போட்டிகளில் இரு அணிகளும் களமிறங்குகின்றன.

இரு அணிகளும் மோதும் முதல் ஒருநாள் போட்டி டர்பன் மைதானத்தில் இன்று நடைபெறுகிறது.

தென்னாபிரிக்காவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது என்பது இந்தியாவுக்குச் சற்று சவாலானதே. 6 போட்டிகளில் 4 ஆட்டங்களில் வென்றால் இந்திய அணி தர வரிசையில் முதல் இடத்தைப் பிடிக்கும்.

டெஸ்ட் தொடரில் விளையாடாத முன்னாள் அணித்தலைவர் டோனி, மனீஷ் பாண்டே, கேதர்ஜாதவ், யசுவேந்திர சஹால், குல்தீப் யாதவ், ஷிரேயாஸ் அய்யர், அக்சர் பட்டேல், ஷர்துல் தாகூர் ஆகியோர் ஒருநாள் போட்டியில் ஆடுகிறார்கள்.

முரளிவிஜய், அஸ்வின், ஜடேஜா, இஷாந்த்சர்மா, பார்த்தீவ் பட்டேல், புஜாரா, ராகுல், உமேஷ்யாதவ் ஆகியோர் நாடு திரும்புகிறார்கள்.

தவானும், ரோகித் சர்மாவும் தொடக்க வீரர்களாக ஆடுவார்கள். கோஹ்லி 3ஆவது வீரர் வரிசையில் வருகிறார். மத்திய வரிசையில் மனீஷ் பாண்டே, கேதர்ஜாதவ், ஷிரேயாஸ் அய்யர், தினேஷ் கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.

அதேவேளை, டெஸ்ட் தொடரை வென்றது போல் ஒருநாள் தொடரையும் கைப்பற்றும் ஆர்வத்தில் தென்னாபிரிக்கா உள்ளது. சொந்த மண்ணில் விளையாடுவது அந்த அணிக்குக் கூடுதல் பலமே.

தென்னாப்பிரிக்கா அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரரான டிவில்லியர்ஸ் காயம் காரணமாக முதல் 3 போட்டிகளில் விளையாடவில்லை.

இலங்கை நேரப்படி இன்று மாலை 4.30 மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டம் சொனி டென் டெலிவிசனில் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படுகிறது.

அணி விவரங்கள் வருமாறு:

இந்தியா: விராட் கோஹ்லி (அணித்தலைவர்), ரோகித்சர்மா, தவான், கேதர்ஜாதவ், தினேஷ் கார்த்திக், மனிஷ் பாண்டே, ரகானே, ஹர்த்திக் பாண்ட்யா, யசுவேந்திர சஹால், குல்தீப் யாதவ், முகமது ஷமி, புவனேஷ்வர்குமார், பும்ரா, அக்ஷர் பட்டேல், ஷர்துல் தாக்கூர்.

தென்னாபிரிக்கா: டுபெலிசிஸ் (அணித்தலைவர்), ஹசிம் அம்லா, குயின்டன் டிகாக், டுமினி, மார்கிராம், டேவிட் மில்லர், மோர்னே மோர்கல், இம்ரான் தாகீர், கிறிஸ் மோரிஸ், ரபடா, நிகிடி, தபரிஷ் சம்ஷி, ஜோன்டோ, பெகுல்வாயோ. (ஐ)

# அம்பலமான சூதாட்டம்



ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடந்த கிரிக்கெட் போட்டியில் சூதாட்டம் நடத்தப்பட்டிருப்பது வெட்ட வெளிச்சமாக அம்பலமாகியுள்ளது.

எண்ணெய் வள நாடுகள் பங்குபற்றும் 'அஜ்மான் ஓல் ஸ்டார்ஸ்' என்ற கிரிக்கெட் தொடர் நடந்து வருகிறது.

ஐசிசி மற்றும் ஐக்கிய அரபு இராச்சியக் கிரிக்கெட் சபையின் முறையான அனுமதியுடன் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் துபாய், ஷார்ஜா அணிகள் மோதிய நிலையில் சூதாட்டம் நடந்துள்ளது.

வீரர்கள் வேண்டுமென்றே ஆட்டமிழக்கின்ற வீடியோ வைரலாகியுள்ளதால், ஐசிசி ஓரிரு நாட்களில் விசாரணை நடத்தலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுதவிர அஜ்மான் ஓல் ஸ்டார்ஸ் தொடரும் கைவிடப்பட்டுள்ளது.

# ஜாம்பவான்களின் தொடர்




சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ள சென். மொறிட்ஸ் ஐஸ் கிரிக்கெட் தொடரில் கிரிக்கெட்டின் ஜாம்பவான்கள் பங்கேற்கவுள்ளனர்.

சுவிட்சர்லாந்தில் சென். மொறிட்ஸ் ஐஸ் கிரிக்கெட் தொடர், எதிர்வரும் பெப்ரவரி 8 மற்றும் 9ஆம் திகதிகளில் நடக்கவுள்ளது.

இத்தொடரில் விளையாடுவதற்கு ஏற்கனவே தென்னாபிரிக்காவின் ஸ்மித் மற்றும் கலிஸ் ஆகியோர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இவர்களோடு, லசித் மலிங்க, அப்ரிடி, விட்டோரி, சோயிப் அக்தர் போன்ற வீரர்களும் பங்கேற்கவுள்ளனர்.

இந்நிலையில் இலங்கை ஜாம்பவான் திலகரத்னே டில்ஷான், நியூசிலாந்து அணியின் நதன் மெக்குலம், இந்தியாவின் முன்னாள் வீரர் அஜிட் அகர்க்கர் போன்ற வீரர்களும் கிரிக்கெட் தொடரில் விளையாட தற்போது சம்மதம் தெரிவித்துள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 01.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.